# நாடாளுமன்றுககு அருகே பொலிஸார் மீது சூடு!
# ஐவர் காயம்; இரண்டு துப்பாக்கிகளும் பறிப்பு!!

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 17 இதழ் 52
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 31-3-1995

(கொழும்பு)

நாடாளுமன்றத்துக்கு அருகில் நேற்று துப்பாக்கி நபர்கள் பொலிசார் மீது சுட்டனர். இந்தச் சம்பவத்தில் இரு பொலிசாரும், பொதுமக்கள் மூவரும் காயமடைந்தனர்.

பொலிஸ் ரோந்துப் படையினர் மீதே துப்பாக்கி நபர்கள் சுட்டதாக பி. பி சி. தெரிவித்தது.

இரண்டு பொலிசாரையும், மூன்று பொதுமக்களையும காயப்படுத்திய இந்த துப்பாக்கிநபர்கள் இரண்டு தானியங்கி துப்பாக்கிகளையும் கைப்பற்றியிருக்கிறார்கள்.

இலக்கத்தகடு இல்லாத கார் ஒன்றில் இந்த துப்பாக்கி நபர்கள் தப்பிச் சென்றுள்ளார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. பாணி தாக்குதல்?

(கொழும்பு)

கொழும்பில் நேற்று இடம் பெற்ற பொலிசார் மீதான தாக்தகல் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல் பாணியை ஒத்திருக்கவில்லையென பி,பி.சி. தெரிவித்தது.

இது 1988ம் ஆண்டு முதல் 90ம் ஆண்டுவரை ஜே.வி.பி. என்ற சிங்கள தீவிரவாத அமைப்பு மேற்கொண்ட ஒரு தாக்ததலைப் போலவே இருந்தது என பி பி.சி. மேலும் தெரிவிந்தது. இ

# ஜனாதிபதி மாளிகை அருகே
# பட்டப்பகலில் 65 லட்சம் ரூபா
# வங்கியில் துணிகரக் கொள்ளை!

## கொள்ளையரைத் தேடி பொலிசார் வலைவிரிப்பு!!

[கொழும்பு]

கொழும்பு நகரில் நேற்று பட்டப்பகலில் துணிகர வங்கிக்கொள்ளை ஒன்று இடம்பெற்றது.பலத்த பாதுகாப்புடன்இருந்தஜனாதிபதியின் மாளிகை அருகே உள்ள தனியார் வங்கியான 'செலான்' வங்கியில் இந்தக் கொள்ளை இடம்பெற்றது. சுமார் 65 லட்சம் ரூபா இந்த வங்கியில் நேற்று கொள்ளையடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. வெள்ளைச் சீருடை அணிந்த நான்கு பேர் இந்தக் கொள்ளையை நடத்தியதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(4ம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பு பகுதி அதிர்ச்சி!

[கொழும்பு]

கொழும்பு மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்த ஒரு சமயத்தில் பொலிசார்மீது துப்பாககிப் பிரயோகமும், 'செலான்' வங்கிக் கொள்ளையும் எவ்வாறு இடம்பெற்றன என்பது குறித்து பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் வியப்பும் அதிர்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

இந்த இரு சம்பவங்கள் குறித்தும் உயர்மட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசு உயர்பீடம் அவசர உததரவுகளைப் பிறப்பித்துள்ளதாகவும் தெரிவிககபடுள்ளது.

விடுதலைப் புலிகள் அரசுககு காலக்கெடு விதித்தலதயடு

(4-ம் பக்கம் பாாகக)

## அரசு தொடர்பு சாதனம் மௌனம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று இடம் பெற்ற பொலிசார் மீதான தாக்குதல் பற்றியும், செலான் வங்கிக் கொள்ளை பற்றியும் அரசு தொடர்பு சாதனங்கள் எதுவித தகவலும் தெரிவிக்கவில்லை.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபன

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு பிரிட்டிஷ் உபகரணங்கள்

(கொழும்பு)

பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் யாழ்.பல்கலைகழகத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட உபகரணங்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுசெல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது,

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துககு பல மாதங்களுக்கு முன்பு பிரிட்டிஷ் அரசினால் வழங்கப்பட்ட இந்த உபகரணங்களை யாழ்ப்பாணத்துக்கு

(4ம் பக்கம் பார்க்க[

### பாதுகாப்பு அமைச்சு கைதடி
## பனை ஆராய்ச்சி நிலையத்திற்கு உபகரணம் அனுப்ப அனுமதி

[கொழும்பு]

கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்திற்குத் தேவையான உபகரணங்களை கட்பல்மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பனைஅபிவிருத்தி சபைத் தலைவர் எம். பாக்கியநாதன் மேற்கொண்ட துரித நடவடிக்கையை அடுத்து இவ் அனுமதியை பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(2-ம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் முட்டாள் தினம்பற்றி காவல்துறை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலையில் எமது மக்களும் இயக்கமும் அளப்பரிய தியாகங்களையும், சாதனைகளையும் படைத்துவருகின்றனர். தமிழர் வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத முறையில்பல்வேறுபட்ட சவால்களையும், நெருக்கடிகளையும் முறியடித்து புதிய வரலாலொன்றை படைக்கும் அற்புதமான பணியில் தம்மை முற்றாக அர்ப்பணித்து வருகின்றனர். ஒழுக்கமும், கட்டுப்பாடும், சமூக

(2ம் பக்கம் பார்க்க)

### 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை:
## புதிய முறையில் நடைபெற ஏற்பாடுகள் பூர்த்தி

(கொழும்பு)

இவ்வாண்டு நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை புதிய முறையில் திருத்தப்பட்ட வகையில் நடைபெறவிருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தெரிவிக்கப்பட்டதாவது: இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள்யாவும் அடுத்த தவணையிலிருந்து ஆரம்பிக்கப்படும்.

பிரச்னைகளை தீர்ப்பது, அவதானிப்பது, காரணங்களைக்

(4ம் பக்கம் பார்க்க)

## பாதை திறப்பு விவகாரம்: சந்திரிகாவுக்கு நெருக்குதல்

(கொழும்பு)

பூநகரி பாதை திறப்பது சம்பந்தமான விடுதலைப்புலிகளின் கோரிக்கை பற்றி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா விரைவாக முடிவு எடுக்கும் நெருக்குதலுக்கு தற்போது தள்ளப்பட்டிருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளில் இரண்டை நிராகரிப்பதாக ஜனாதிபதி சந்திரிகா அறிவித்திருந்த போதிலும் பாதை திறப்பு விடயத்தில் விடுதலைப்புலிகள்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (பரிஸ் சிங்கிள்) ஹார்மோனியம் விற்பனைக்கு உண்டு. து.கணேசன், இசைக் கருவிகள் திருத்துபவர், 4-ம் கட்டை, பிரதான வீதி, மானிப்பாய்.

(சி-1432)

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இரு மாதமாக இடம்பெற்றுவந்த உளவளத்துணை தொகுதி 5 இன் நிறைவு நாளும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 02-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. -ரி

### சித்த மருத்துவம் மலர் வெளியீடு

(கொழும்பு)

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்றத்தின் சித்தமருத்துவம்மலர் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு கைதடி யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அரங்கில் நடைபெறவுள்ளது.

டாக்டர் எஸ் பவானி தலைமையில் நடைபெறவுள்ள இம் மலர் வெளியீட்டு வைபவத்தில் பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் எஸ், வி. பரமேஸ்வரன் உட்பட பலர் பங்குபற்றுகிறார்கள். ம-ரி

# "மலையகமக்களுக்குதனியான நிர்வாக அமைப்பு வேண்டும்"

## — பிரதி அமைச்சர் சந்திரசேகரன் பேட்டி

(லண்டன்)

மலையக தமிழ் மக்களுக்கென்று தனியான நிர்வாக அமைப்பு ஒன்று தேவை என்று நாம கேட்கிறோம். சாதாரணமாக மலையகத்தில் 10 லட்சம் இந்தியத் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இலங்கையில் வாழும் 35 லட்சம் தமிழர்களில் 10 லட்சம் பேர் மலையகத்தில் வாழ்கிறார்கள் என்று பிரதி அமைச்சர் சந்திரசேகரன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

பெரும்பான்மையாக இவர்கள் மத்திய மலைநாட்டில் செறிவாக வாழ்கிறார்கள். ஆனால் ஒரு விசித்திரம் என்னவென்றால் இப்பகுதியிலே தேர்தல் தொகுதிகளை எடுத்துக்கொண்டால ஒரு தொகுதியிலாவது நிச்சயமாக மலையக மக்களின் பிரதிநிதி வெல்ல முடியுமென்ற தேர்தல் தொகுதிகூட இல்லை. ஆகவே தான் இந்த லட்சம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய தனியான நிர்வாக அலகு அல்லது அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கோருகிறோம்.

அதை என்ன பெயர் கொண்டும் அழைக்கலாம். ஆனால் இந்த 10 லட்சம் மக்களின் அபிலாஷைகளை, தேவைகளை பூர்த்தி செய்கின்ற நிர்வாக அமைப்பு வேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும்.

இந்த மக்கள் சிதறி வாழ்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இவர்கள் ஊவா, சப்பிரகமுவ, மத்திய மாகாணங்களிலேயே பெரும்பாலும் இருக்கிறார்கள். ஆனால் இந்த தொகுதி அமைப்பு ஏற்படுத்தப்படும்போது இந்த மலையக மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற தொகுதிகளாக ஏற்படுத்தப்படவில்லை. திட்டமிட்டு நடந்ததா, தற்செயலாக நடந்ததா என்பது கேள்விக்குறியாகும் ஆனால் இப்போது அமைக்கப்பட்டிருக்கும் தேர்தல் தொகுதிகள் எல்லாமே இந்த மலையக தமிழ் மக்கள் சிறுபான்மை மக்களாக இருக்கின்ற ஒரு நிலையிலே அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையாலே தான் இம் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யக்கூடிய நிலையில்லாமல் உள்ளது.

ஆகவே இவர்களை பிரதிநிதிப்படுத்தக்கூடிய வகையில் தேர்தல தொகுதிகளை மாற்றியோ அல்லது புதிய நிர்வாக முறையின்கீழ் கொண்டு வரலாம்.

நிர்வாகப் பரவாக்கலைச் செய்துகொள்ள முனையும் இந்த அரசு, இவர்களின் பிரச்னைகளை, அபிலாசைகளை கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற அமைப்பை உருவாக்கவேண்டும். அது தனி மாகாணமோ, அல்லது மாகாணத்தினுள் ஒரு அலகாகவோ அமையலாம்.

தோட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடுகள் நேரடியாக பயன பெறுவதில்லை. அதிகமானோர் பெருந்தோட்டத்துறையிலே இருப்பதனால் இவர்கள் வாழும் பிரதேசம்கூட பெருந்தோட்டத் துறை நிர்வாகத்தின் கீழேயே வருகிறது.

ஆகவே எல்லா அமைச்சுக்களிலும் ஒதுக்கப்படுகின்ற நிதிகள் தோட்டப்பகுதிகளுக்கு வந்து சேரவேண்டும்.

தோட்டப் பகுதிகளும் தேடுவாரற்ற அழிவு நிலைக்குட்பட்ட பிரதேசமாகவே இப்போது இருக்கிறது. இதனை மறுசீரமைப்பதற்கான ஒரு அமைப்பு, ஒரு அலகு எல்லா அமைச்சுக்களிலும் ஏற்படுத்தப்படவேண்டும்.

பொதுவாகவே சிறுபான்மை மக்கள் தங்கள் உரிமைகளைக் கேட்கும்போது இனமோதல்கள் பற்றி பலராலும் பேசப்படுவது.

இப்படிச் சொல்லிப் பயமுறுத்துவது வழமை. ஆனால் அதற்கான நிர்ப்பந்தம் அது வரலாற்று நிர்ப்பந்தமாக எதிர்காலத்தி மாறிவருகிறது. இத்தகைய ஒரு கருத்துக்காக எமது கோரிக்கையிலிருந்து பின்வாங்கி இந்த சமூகத்தின் சீரழிவுக்கு நாமும் உடந்தையாக இருக்க விரும்பவில்லை. -கே-ரி

### பூங்கா திறப்புவிழா

[கொழும்புத்துறை]

கடற் கரும்புலிகள் கப்டன் வாமன் சிறுவர் போஷாக்கு பராமரிப்புப் பூங்கா யாழ். தொண்டமனாறு கெருடாவிலில் கடந்த 22ம் திகதி புதன் கிழமை சம்பிரதாயபூர்வமாக மங்கள விளக்கேற்றி திறந்து வைக்கப்பட்டது. 154

### மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசாமி தேவஸ்தான மகோற்சவம் இம்மாதம் 28ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தேர்த்திருவிழா ஏப்பிரல் 14ம் திகதியும் தீர்த்தத்திருவிழா 15ம் திகதியும் இடம்பெற இருக்கின்றன. ம

### பாதுகாப்புபகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்து கொழும்பிலும் அதன்சுற்றுப புறங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நகரின் முக்கிய பகுதிகளெல்லாம் வீதித்தடைகள் போடப்பட்டு நகருக்கு உள்ளே வரும் வாகனங்களும், வெளிச் செல்லும் வாகனங்களும் பலத்த சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

இப்படியான கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருந்த ஒருநேரத்தில் இந்த இரண்டு துணிகரச் சம்பவங்களும் எப்படி இடம் பெற்றன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தமது புருவத்தை உயர்த்தியுள்ளனவாம்- (இ)

### ஏப்ரல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதியும் மிக்க நல்லதொரு ஆரோக்கியமான சமுதாய அமைப்பைக் கட்டியெழுப்பும் பணியில் எமது மக்கள் சகலரும் தமது பங்களிப்பை நல்கி வருகின்றனர்.

தமிழீழ காவல் துறை பொறுப்பாளர் பா. நடேசன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இச் சூழ்நிலையில் ஒருசில பொறுபபற்ற நபர்கள் மட்டும் ஏப்பிரல் மாதம் முதலாம் நாளை ''ஏப்ரல் முட்டாள் தினம்'' எனக் கூறிக் கொண்டு எமது மக்களின் சமூக வாழ்விற்கு சிறிதும் பொருத்தமற்ற அநாகரீகமான அடாவடித்தனங்களைப் புரிந்துவருகின்றனர். இவ்வாறான செயல்கள் எமது மக்களால் வெறுக்கப்படுபவை. எமது மக்களின் சமூக வாழ்விற்கு குந்தகம் விளைவிப்பவை.

எனவே எதிர்வரும் ஏப்பிரல் முதலாம் நாள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் மீது தமிழீழ காவல் துறையினர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பர் என்பதை அறியத் தருகின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-03-31**

வெள்ளி இரவு

08-02 சிறப்பு நிகழ்ச்சி- தமிழீழன் எழுதிய ''போடபங்குனின்ற பெருமாவீரர்''
08-30 செய்திகள்
08-40 அரசியல் அரங்கம் - வே. பாலகுமாரன் எழுதிய ''ஊரான் பணத்தில் உலகை ஏய்ப்பவர்கள்''
08-50 ஏர்முனை- நிகழ்ச்சியில் ''வைரவப்பிள்ளை வரம்பு கட்டுகிறார்'' குறுநாடகம்

**1995-04-01**

சனி காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—03—31**

வெள்ளி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை!
05-15 கணநேரக் காவியங்கள்
05-30 மண்ணின் குரல்
05-40 நேயர் கடிதம்
05-45 வெற்றிச் சுவடுகள்
06-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
06-02 நாடகம்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
6-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

புதிய அரசியல் யாப்பில் **பௌத்த மதம், சிங்கக் கொடி**

# மாற்றத்திற்கு கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

பௌத்த மதம், சிங்கக் கொடி ஆகியவற்றிற்கு தற்போதைய அரசியல் யாப்பில் இடம் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தை மாற்றம் செய்வதற்கு அஸ்கிரிய மல்வத்த பௌத்த பீடாதிபதிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய உத்தேச மாற்றங்கள் குறித்து அண்மையில் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இந்த இரு பீடாதிபதிகளையும் சந்தித்து விளக்கமளித்திருந்தார்,

அப்போதே இக்கருததை பீடாதிபதிகள் அமைச்சருக்கு தெரிவித்ததாக கூறப்படுகிறது.

தற்போதைய அரசியல் யாப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு இனத்தவர், மதத்தினர் வாழும் இலங்கையில் ஒரு மதத்திற்கு மாத்திரம் முன்னுரிமை அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பதை சிறுபான்மையினர் எதிர்ப்பு தெரிவித்து வருவது தெரிந்ததே. கே-சி-ரி

## சரக்குக் கூட்டுத்தாபனத்தில் 2 கப்பல்களே இருக்கிறது

(கொழும்பு)

இலங்கைச் சரக்குக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமாக இருந்த 18 சரக்குக் கப்பல்களில் தற்பொழுது இரண்டு மாத்திரமே அரசாங்கத்துக்கு சொந்தமாக உள்ளது என்று 'லக்பீம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

'லங்கா மகாபொல', 'லங்காமுதின' ஆகிய இந்த இரண்டு கப்பல்களையும் அர அரசாங்கம் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுத்திருப்பதோடு வெளிநாடுகளுக்குச் சொந்தமாக 5 கப்பலகளை அரசரங்கம் வாடகைக்குப் பெற்று உபயோகத்துக்கு பாவித்து வருகின்றது என்று 'லச்பீம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த 17 ஆண்டுக் காலத்தில் அரசாங்கம் 18 கப்பல்களை சொந்தமாக வைத்திருந்து அவைகளில் 16 கப்பல்களை விற்பனை செய்துள்ளது.

விற்கப்பட்ட கப்பல்களில் 'லங்கா அஜித்', லங்கா அத்துல ஆகிய கப்பல்களை விற்றும் இன்றும் கூட அரசாங்கம் அதற்குரிய பணத்தைப் பெற்றுக் கொள்ளவில்லையென்று 'லக்பீம' மேலும் தெரிவித்துள்ளது. (ம-ரி)

## நன்றி செலுத்தும் ஆராதனை

கிறிஸ்தவ சேவ ஆச்சிரம ஸ்தாபகர்
வணக்கத்திற்குரிய பிதா
சேவக் எஸ். செல்வரட்ணம்
( பெரியண்ணன் )
அவர்களின் 22-வது ஞாபக ஆராதனை
( நற்கருணை ஆராதனை )
ஆச்சிரம ஆலயத்தில்
01 – 04 – 95 சனிக்கிழமை
காலை 7—30 மணிக்கு நடைபெறும்.

அன்பர்கள் யாவரும் இவ்வாராதனையில்
கலந்து கொள்ளுமாறு அன்புடன
அழைக்கின்றோம்!

— வண. பிதா. சேவக் சாமுவேல்
தேவரத்தினம் அல்பிறட்
(சாம். அண்ணா)

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்,
சுன்னாகம்.

( சி-1430 )

### விநியோகம்

(மானிப்பாய்]

மானிப்பாய் பலநோக்குக் கூ. சங்கக் கிளைகளில் வறுமை நிவாரண உணவு முத்திரையின் 12 வது புள்ளிக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. -71

### மகளிருக்கான ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள சின்னமுத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நாளை 1-ம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு மகளிர் அமைப்பு கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. யாழ்கோட்ட, வலிகாமக் கோட்ட பலநோக்குகூட்டுறவுச் சங்க, பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்க இரண்டாம்படி சங்கங்கள், மற்றும் பொது நிர்வாக சேவையின் கீழ் பதிவு செய்த பதிவுசெய்யாத அனைத்து, மாதர்சங்கங்கள் மகளிர் மன்றங்கள் (வலிகாமம் கோட்டத்திற்கு உட்பட்ட) இந்துமகளிர் மன்றங்கள், உழைக்கும் மகளிர்மன்றங்கள் அனைத்தின் தலைவி செயலாளாகளையும் தவறாது கலந்துகொள்ளும்படி யாழ்மாவட்ட மகளிர் அமைப்பு கேட்டுக்கெள்கிறது.

மணிவாக்கு

பிறர் வழியாக தெரிந்து கொண்ட முழு உண்மையைவிட, தானே தெரிந்து கொண்ட அரை உண்மையே மேல்.

- கோதே

★ இன்று தந்தை செல்வா பிறந்த தினம்

# தமிழரின் தனித்துவத்தை நிலைநாட்ட பாடுபட்டவர் தந்தை 'செல்வா'

''தந்தை செல்வா'' என்று தமிழ்பேசும் மக்களால் அழைக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதல் தலைவராக விளங்கிய எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் பிறந்தநாள் இன்றாகும்.

1948-ம் ஆண்டு தொடக்கம் 30 ஆண்டுகளாக தமிழரின் தனித்துவத்தை நிலைநாட்டப் பாடுபட்டவர் அவர்.

தமிழ் மக்களை ஒருமுகப் படுத்தி அவர்களின் பாரம் பரிய தாயகத்தை தாமே ஆட்சி புரிய அனுமதிக்கும்படி போராடத்தூண்டிய பெருமை தந்தை செல்வாவையே சாரும்.

பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையை தேர்ந்தெடுத்த செல்வா, அத்துறையில்சிறந்த அறிஞனாகி கியூ. சி. பட்டத்தைப் பெற்று பலரதும் பாராட்டையும் பெற்றார்.

அரசியல் உலகில் அவர் தூய்மையான அரசியல்வாதியாகத் திகழ்ந்து தன் அரசியல் எதிரிகளாலும் பாராட்டப்பெற்றவர். அரசியலில் இறங்காது இருந்திருந்தால் அவர் சட்டத்துறையில் ஒளி வீசி ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக விளங்கியிருப்பார் என்பது அவரது சமகாலத்தவர்களின் கருத்தாக இருந்தது. அப்பதவி மூன்று முறை அவரை தேடி வந்தது என்றும் சொல்லப்படுகிறது. தமிழ் இனத்தின் விடுதலையே இலட்சியமாக இருந்த செல்வா அரச பதவியை ஏற்கவில்லை.

1956-இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டதிலிருந்து 1977வரை 21 ஆண்டுகள் பத்துக்கு மேற்பட்ட எதிர்ப்பு இயக்கங்களை அவர் நடத்தினர். அவை சனநாயக அடிப்படையில் அமைந்திருந்தபோதும் விளைவுகள் ஆட்சியிலிருந்தவர்களை சிந்திக்க வைத்தன. ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீ. ல. சு. கட்சியும் அவருடன் செய்து கொண்டபின் கிழித்தெறியப் பட்ட ஒப்பந்தங்கள் இதற்கு சான்று.

1972 ல் ஐக்கிய முன்னணி அரசு உருவாக்கிய புதிய அரசியலமைப்பினல் தமிழர் உரிமைகள் முற்றாக அழிக்கப் பட்ட நிலை கண்ட செல்வாவின் போக்கில் பாரிய திருப்பம் ஏற்பட்டது.

செல்வா தன் பாராளுமன்றப் பிரதிநிதிப் பதவியைத் துறந்தார். அன்றைய அரசுக்கு சவால் விடும் வகையில் ''தமிழ்மக்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு இருக்குமெனக் காட்டமுடியுமானல் காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்டு வென்று காட்டுங்கள்'' என்று கூறிவிட்டுப் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறினர். இரண்டாண்டுகள் இடைத் தேர்தல்கள் நடத்தாது தட்டிக் கழித்த அரசு பின்னர் நடத்திய தேர்தலில் செல்வா வெற்றிபெற்றார்.

இருபதாண்டுகளுக்கு மேலாகச் சாத்வீக முறையில் தமிழர் உரிமைகளுக்காக போராடிய தமிழர் அமைப்புகள், சிங்கள அரசியலாளரிடமிருந்து உரிமைகளை என்றுமே வென்றெடுக்க முடியாது என்பதை உணர்ந்து, பிரிந்து வாழ்வதுதான் ஒரே வழி என்ற தந்தை செல்வாவின் முடிவை ஏற்றுக்கொண்டன.

அன்று தந்தை செல்வா தொடங்கி வைத்த புதிய போராட்டம் எதிரிகளை வென்று ஒரு புதிய சமுதாயத்தை இங்கே தோற்றுவிக்கும்போது அன்று வாழ்ந்து கொண்டிருக்கும் சுதந்திர மனிதர் ''என்றோ ஒரு நாள் இதற்கு வித்திட்டவர் தந்தை செல்வா'' என நன்றியுடன் அவரை நினைவு கூர்ந்து கொண்டாடுவர் என்பது திண்ணம்.

எஸ். பி. கே.

## நமது நோக்கு

### அவரின் அனுபவம்!

கடந்த 45 ஆண்டு காலத் தமிழ் மக்களின் வரலாற்றில் தந்தை செல்வாவின் அரசியற் பணி மறக்க முடியாத தொன்று.

வடகிழக்குத் தமிழர்களின் அரசியல் உணர்வுகளை விழிப்படையச் செய்து, ஒருமுகப்படுத்தி, போராட்டங்களை நடாத்தி உரிமைக்காகக் குரல் கொடுத்தார்.

பெருகிவரும் தமிழ் உணர்வுகளைக் கண்ட சிங்கள அரசுகள் என்ன செய்தன?

வாக்குறுதிகளை அள்ளி வீசின; ஒப்பந்தங்களை உருவாக்கின.

ஆனல் - அந்த ஒப்பந்தங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டனவா?

பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழிபட பௌதத் சிங்கள இனவாதிகள் காரணமாக இருந்தனர்.

1960 மார்ச் மாதத் தேர்தலின் பின் எந்தக் கட்சியும் நிலையான ஆட்சி அமைக்க முடியாத நிலை தோன்றியது.

ஐ. தே. க. அரசமைக்க உதவுமாறு தந்தை செல்வாவிடம் கோரிக்கை விடப்பட்டது. சேர் எட்வேட் ஜெயதிலகா, அருணசலம் மகாதேவா, கததோலிக்க திருச்சபைப் பிரமுகர் ஒருவர் கூட்டாகச் சேர்ந்து கோரிக்கை விட்டபோது, பண்டா - செலவா ஒப்பந்தத்தை அமுல் செய்யும்படி கேட்டார். ஐ. தே. க. ஒப்பவில்லை.

அதனல் - ஆட்சி அமைத்த டட்லி அரசு தோல்வி கண்டது விளைவு? 1960 ஜூலையில் மீண்டும் பொதுத் தேர்தல்.

பண்டா - செலவா ஒப்பந்தத்தை அமுல் செய்வோம் எனக் கூறி ஆதரவு பெற்ற சுதந்திக் கட்சி பெருமபான்மை பெற்று, ஆட்சிக்கு வந்ததும் நடந்தது என்ன?

கொடுத்த வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை. எனவேதான் - தந்தை செல்வா தமிழீழம் பற்றிச் சிந்திக்கத்தொடங்கினர்.

''தமிழ்பேசும் இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு சிங்கள இனத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்!'' என்பது 1960 ஜூலையில் அவர் விடுத்த அறிக்கை.

கடந்தகால அரசியல் அனுபவங்களிலிருந்து நாம் படிக்க வேண்டிய பாடம் என்ன?

பிறர் வாக்குறுதிகளை நம்பாது நம்மை நாமே ஆள வழிவகுக்க வேண்டும். தந்தை செல்வாவின் பிறந்த நாளன்று நாம் இந்த உறுதியினை எடுக்க வேண்டும்!

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி குறித்து

# ஐ. தே. விற்குள் முரண்பாடு

[கொழும்பு]

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை தொடர்பாக ஐ. தே. க. அங்கத்தவர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

இதனைத் தீர்த்து வைக்கும் முகமாக இரு குழுக்களை ஐ. தே. க. நிறுவியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படவேண்டும் என்று ஒரு சிலரும், குறைந்த அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையும் இப்போதய முறையை மாற்றக் கூடாதென ஒரு சாராரும் கட்சியில் இருக்கிறார்கள்.

அரசியல் யாப்பை மீளாய்வு செய்வதற்கு என நியமிக்கப்பட்ட விஷட நாடாளுமன்ற தெரிவுக்குழு கடந்த வாரம் அதன் அமர்வுகளை முடித்துக் கொண்டது.

ஐ. தே. கட்சியினல் ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றிய அதன் கருத்து இக்குழுவுக்கு தெரிவிக்கப்படவில்லையென கூறப்படுகிறது. (கே-ரி]

## இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பட்டு பேரவையினர் தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்தி வரும் வாராந்தரக் கருத்தரங்கல இன்று 31ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணியளவில் திரு. ஆறு திருமுருகனல் 'பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு இடம்பெறும். அறிமுகவுரையை க. புலேந்திரன் நிகழ்த்துவார். -ம

# 'சார்க்கில்' நம்பிக்கையில்லை —ஜனாதிபதி சந்திரிகா

(டாக்கா)

'சார்க், எனப்படும் தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பு, தங்களுக்கிடையே 'பொருளாதார அபிவிருத்தி, உற்பத்தி பெருக்கம் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்துவதில்லை, இவ் அமைப்பில் தமக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தவும், செயற்படுத்தவும் பங்களாதேசும் இலங்கையும் கூட்டாக இணைந்து முயற்சிக்கவேண்டுமெனவும் திருமதி சந்திரிகா கேட்டுக்கொண்டார்.

சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகளான இந்தியாவுக்கும் பங்களா தேஷுக்கும் 6 நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பும் வேளையில் டாக்காவில் திருமதி சந்திரிகா இவ்வேண்டுகோளை விடுத்தார். (கே-ரி]

### வெள்ளி விருந்து

### சிவனின் அருள் வடிவங்கள்

சிவபெருமானின் அருள் வடிவங்களில் ஒன்றே வைரவ வடிவமாகும். எத்தகைய கொடியவர்களையும் தம் மறக் கருணையினல் அடியவராக்கி ஆட்கொள்ளும் பொருட்டுச் சிவபெருமானே பல்வேறு மூர்த்திகளாகவும் வடிவம் கொண்டுள்ளார் என்பதைப் புராண வரலாறுகளினூடாக அறிகிறோம். சிவனே முருகனகிச் சூரசங்காரம் செய்ததையும், விநயகராகிக் கஜமுகாசுரனின் அகங்காரத்தை அடக்கியதையும், வீரபத்திர வடிவம் தாங்கித் தக்கனின் செருக்கை அடக்கியதையும், வைரவராகி பிரமா முதலிய தேவர்களின் அகந்தையை அடக்கியதையும் புராணங்களிலே நாம் காண்கிறோம்.

ஒவ்வொருவருடைய மனப் பக்குவத்திற்கும் இயல்புக்கும் ஏற்ப எந்த மூர்த்தியைத் தொழுதாலும், அந்த மூர்த்தியினிடமாக நின்று அப்பரம் பொருளே வேண்டியதை வேண்டியாங்கு அருளுவார். ''யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே—மாதொரு பாகனர் தாம் வருவர்!'' என்பது சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான சிவஞான சித்தியாரின் கூற்றாகும்.

— சிவ. மகாலிங்கம், பீ. ஏ.

(யாழ். இந்து குடமுழுக்கு விழா மலரிலிருந்து)

### பலதும் பத்தும்

### இரவுத் தமிழர்...!

''சுற்றுலாத்துறைஅமைச்சர் தர்மசிறி ஒருசிங்களவர்; அவரது உதவி அமைச்சரில் ஒருவர் முஸ்லீம்; இன்னெருவர் பகலிற் சிங்களவர்; இரவில் தமிழர்!''— இப்படி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ரவி கருணநாயக்கா நாடாளுமன்றில் கூறியது யாரை? ஏன்?

தென் மாகாணத்தின் பிரபல அரசியற் குடும்பத்தைச் சேர்ந்த நிருபமா என்ற உதவிப் பெண் அமைச்சரையே! அவர் நடேசன் என்ற தமிழரைத் திருமணம் செய்துள்ளார்.

கேள்வி: சில ஆண்டுகளுக்கு முன்பும் ஒரு பிரபல மூத்த அமைச்சரை ''இரவில் தமிழர் எனக் கூறப்பட்டது, தமிழ்ப் பெண்மணியைத் திருமணம் செய்ததால். யாரவர்? சரியான விடையின் கீழ் கோடிடுக.

(1) டட்லி சேனநாயக்கா
(2) மைத்திரிபால சேனநாயக்கா
(3) தஹநாயகா

உதவிக் குறிப்பு: இவர்களில் இருவர் திருமணமாகாதவர்கள்!

— மயூரன்

## இராசி பலன்

31—03—1995
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு பங்குனி—17

அமாவாசை மு. ப. 8.14 வரை, உத்தரட்டாதி மு. ப. 9.05 வரை. சித்தாமிர்தம், இராகுகாலம் காலை 10.42 முதல் 12.12 வரை சுபவேளை காலை 6.12 முதல் 7.42 வரை.

மேஷம்; தொழில் முடக்கம், வழித்தொல்லை, காரியதாமதம்.

இடபம்: குடும்ப மகிழ்ச்சி. எதிர்பாராத நன்மை, பயணம்.

மிதுனம்: விருந்தினர் வருகை. சுபச் செய்தி. மாமனர் அன்பு.

கடகம்: வயோதிபர் துன்பம் அமைதிக்குறைவு, அலைச்சல்.

சிங்கம்: பழிச்சொல், பிறர் தொல்லை, கோபப்படல்.

கன்னி: மாதர் அறிவுரை, சுபகாரியம், கலந்தாலோசனை

துலாம்: இனசனநன்மை, முயற்சிபலிதம், பணவரவு.

விருச்சிகம்: நண்பர் பகை, வீட்டில் துயர், அகால உணவு.

தனுசு; குறை கேட்டல். தொழில் போட்டி, மனப் பயம்.

மகரம்; பணியாள் உபாயம், வேலைப்பழு, வெகுஜன மதிப்பு.

கும்பம்: உடல் உபாதை, மாதாகவலை, மனப்போராட்டம்.

மீனம்: வசதிவாய்ப்பு, குடும்பசுகம், தப்பபிப்பிராயம்.

— ஜோஸ்யர்

### தவக்கால நற்சிந்தனை

''நான் அவரிடமிருந்து வருகிறேன். என்னை அனுப்பிய வரும் அவரே.''

(அரு. 7.29

நசுக்கப்பட்டோர், துயருறுவோர், புறக்கணிக்கப் பட்டோரின் தேற்றரவாளராக இறைவன் செயற்படுகிறார். இவர்களின் அழுகுரலை இவர் கேட்காமல் இல்லை. மாறாக அவர் குரலை நாம் கேட்கிறோமா? அவர் குரலுக்கு செவிமடுக்கிறோமா? இப்போதாவது அவர் கூறுவதைக் கேட்போம்.

— தா. மைதிலி

மரவளம் பெருகிட
மண்வளம் சிறப்புறும்

# பிரபாவை கைதுசெய்ய சட்டபூர்வ நடவடிக்கை

## பிரணப் முகர்ஜி கூறுகிறுர்

[புதுடில்லி]

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் தலைவர் திரு, வே. பிரபாகரனை கைதுசெய்தல் சம்பந்தமாக சட்டபூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருவதாக இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. பிரணப் முகர்ஜி கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் நேற்று உரையாற்றிய பொழுது மேற்சண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்; திரு. பிரபாகரனை பிரதான குற்றவாளியாக ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை செய்யும் நீதிபதி ஏற்கனவே பிரகடனம் செய்திருப்பதாகவும் அவரை கைதுசெய்வதற்கான உத்தரவு (வாரண்ட்) 1992ம் ஆண்டு இலங்கையில் ஆங்கில, தமிழ் பத்திரிகைகள் வெளியிடப்பட்டது.

1992 பெப்ரவரி இறுதிக்குள் திரு, பிரபாகரனை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது ஆனுல் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அவர் ஆஜராகவில்லை.

இது சம்பந்தமான அறிவிப்பு சர்வதேச (இன்ரபோல்) அமைப்புமூலம் விடுக்கப்பட்டது என்றும் அமைச்சர் தெரிவித்தார். க இ

---

## சந்திரிகா நாடு திரும்பினுர்

(கொழும்பு)

ஜனுதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா நேற்று நாடு திரும்பினுர்.

இந்தியாவுக்கும், பங்களாதேசுக்கும் ஆறு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சென்ற ஜனுதிபதி நேற்று மாலை நாடு திரும்பினுர். ''தமது விஜயம் பெரும் வெற்றியளித்துள்ளது'' என்று ஜனுதிபதி சந்திரிகா விமானநிலையத்தில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். -வி-இ

---

## பென்ஷன் வவுச்சர்

[மானிப்பாய்]

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்கள ஓய்வூதியர்களின் மார்ச் மாதத்துற்குரிய பென்ஷன் வவுச்சர்கள் யாழ், செயலகத்திற்கு நேற்று வந்துசேர்ந்துள்ளன.

இவற்றை உரியவர்களுக்கு இன்று அனுப்பிவைப்பதற்கான நடவடக்கையில் ஓய்வூதியப்பிரிவு உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். -71-இ

---

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 12-ந் திகதி கப்பலில் செல்லும் நோயாளர்கள் முதலாம் திகதியும், 19-ந் திகதி செல்லும் நோயாளர்கள் 8-ந் திகதியும் பணிப்பாளர் பணிமனைக்கு காலை 9 மணிக்கு வந்து பதியும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. நோயாளர்கள் பின்வரும் ஆவணங்களுடன் தவறுது சமூகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

வைத்திய நிபுணரின் சிபார்சுக் கடிதம், அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியன. -இ

---

## 5ம் ஆண்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டறிதல என்ற வகையில் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் இப்பரீட்சை இடம்பெறும்.

இருபகுதிகளாக நடைபெறும் இப்பரீட்சையில் முதலாவது பகுதி II விணுத்தாள் 45 நிமிடத்தைக் கொண்டதாகவும் பகுதி 2 90 நிமிட விணுத்தாள்களைக் கொண்டதாகவும் அமையும். பகுதி II விணுத்தாள் மாணவர்கள் ஆரம்ப வகுப்பிலிலிருந்து கற்ற 9 பாடங்களைஒட்டியதாக அமையும்.

முன்பு மொழி, கணிதம் ஆகிய இருபாடங்களில் மட்டுமே பரீட்சை நடாத்தப்பட்டது தெரிந்ததே.

இவ்வருடம் மேற்படி பரீட்சை டிசம்பர் மாதத்தில் நடாத்தப்படுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. க- இ

---

க. பொ, த [உ/த] மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறு:

# ஹாட்லி கல்லூரி மாணவருக்கு பொறியியல்பிரிவில் 2-ம் இடம்

(கொழும்பு)

கடந்தவருடம் நடைபெற்ற க. பொ த. (உயர்தரம்) பரீட்சையின் நேற்று வெளியிடப்பட்ட மீளாய்வு செய்யப் பெறுபேறுகளின் படி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ராஜேந்திரன் முகுந்தன் பொறியியல் மற்றும் பௌதீக விஞ்ஞானம் பிரிவில்அகில இலங்கைலும்ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதே பிரிவில் றேயல் கல்லூரியைச் சேர்ந்த ஜெகத் சஞ்சீவ ஆகக் கூடுதவான புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்துக்கு வந்துள்ளார்.

மருத்துவ மற்றும் உயிரியியல் விஞ்ஞானப் பிரிவில் கொழும்பு றேயல் கல்லூரியைச் சேர்ந்த தர்ஜின் சுஜிபதி அல்விஸ் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இதேபிரிவில் கண்டி தர்மராஜ கல்லூரியை சேர்ந்த பந்துல மகேஷ் அத்தவுட ஆராய்ச்சி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

வர்த்தகப் பிரிவில் கொழும்பு மியூசியஸ் கல்லூரியை சேர்ந்த தாரங்க சுபாஷினி கொலம்பாராய்ச்சி முதலாம் இடத்தை பெற்றுள்ளார்.

கண்டி கிங்ஸ்வுட் கல்லூரியைச் சேர்ந்த ரி. எச். என். ஜயசேகரா 2வது இடத்தைப் பெற்றுள்ளார்.

கலைப் பிரிவில் கொழும்பு மெதடிஸ்த கல்லூரியைச் சேர்ந்த டபிள்யு கே. எம், தியாபிகா முதலாமிடத்தையும் காலி மகளிர்கல்லூரியைச் சேர்ந்த எஸ் என். அபர்ணு 2வது இடத்தைப் பெற்றுள்ளார். கடந்வ வருடம் க் பொ. த. (உயர்தர) பரீட்சைக்கு தோற்றிய ஒரு லட்சத்து 98 ஆயிரம் பேரில் 48 ஆயிரத்து 900 பேர் பல்கலைக் கழக அனுமதிக்கான அடிப்படை தகுதியை பெற்றுள்ளனர்

மீளாய்வு செய்யப்பட்ட பின் திருத்தப்பட்ட புள்ளிகளின் விபரங்களும் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார். க-இ

---

# மின்சாரசபை ஊழியர் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் நேற்று முதல் மேற்கொள்ள இருந்த நாடளாவிய வேலைநிறுத்தம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது

ஜனுதிபதி சந்திரிகா பதவியேற்ற சில நாட்களுக்குள். இலங்கை மின்சாரசபையை தனியார் வசம் ஒப்படைப்பேன் என்று கூறியதை ஆட்சேபித்து மேற்படி வேலை நிறுத்தம் ஏற்பாடுசெய்யப் பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டுவிட்டதாக நேற்று அறிவித்ததைத் தொடர்ந்து, தமது வேலை நிறுத்தத்தை தாம் கைவிட்டு விட்டதாக மின்சாரசபை ஊழியர் சங்கத் தலைவர் திரு, நிகால் தெரிவித்தார். வி இ

---

# சீன சுரங்கவிபத்து: 40 பேர் பலி.

(பெய்ஜின்)

சீனுவின் வடபகுதியிலுள்ள நிலச்சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் 40 பேர் பலியானதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நிலச்சுரங்கத்தின் அடியில் வாயு சிலிண்டர் ஒன்று வெடித்ததினுல் இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 40 பேர் பலிபானதாகவும், 8 பேர் படுகாயமடைந்ததாகவும், 100 பேர் காயமின்றி மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். வி-இ

---

## நாடாளுமன்றுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிசார் அவர்கள்மீது சுட்டபோதும்அவர்கள்தப்பிச் சென்றுள்ளார்கள்.

எதுல் கோட்டே என்ற இடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து நேற்று கொழும்பு நகரில் பெரும் பரபரப்பும் பீதியும் ஏற்பட்டது. இ

---

## அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மும இதுகுறித்து நேற்று மௌனம சாதிததன.

இதேவேளையில் இந்த இரு சம்பவங்களையும் அடுதது நேற்று கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது.

வீதித் தடைகள் எங்கும் போடப்பட்டு தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இராணுவத்தினரும் பொலிசாரும் பெருந்தொகயாக பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன. -இ

---

# ரஷ்ய ஆயுதக்கிடங்கில் பாரிய வெடி விபத்து

## ரொக்கட்டுகள் விண்ணில் வெடித்தன

(மொஸ்கோ)

ரஷ்யாவின் கிழக்கில் சீன எல்லை அருகே இராணுவ ஆயுதக் கிடங்கில் தொடராக பெரிய குண்டுவெடிப்புகள் இடம்பெற்றுள்ளன,

அந்தக் கிடங்கில் வைக்கப் பட்டிருந்த நூற்றுக்கணக்கான ஏவுகணை உந்துவிசைப் பொருள்கள் மீது பற்றிய தீ தொடராக பல வெடிப்புகளுக்கு காரணமாகிவிட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரொக்கெட்டுகள் விண்ணில் வெடித்ததாக ரஷ்ய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பகுதியில் இருந்து பத்து கலோ மீட்டர் தொலைவு வரை இடிபாடுகள் தெறித்து விழுந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் இந்தப் பகுதியிலிருந்துபாதுகாப்பானஇடங்களுககு கொணடுசெல்லப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்திஞல் ஏற்பட்டஉயிர்ச்சேதங்கள் குறித்து தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. -இ

---

## ஜனுதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் துணிகரக் கொள்ளையை நடாத்திவிட்டு தப்பிச் சென்றுள்ள கொள்ளையரைத் தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளனர்.

நாடாளுமன்றக் சட்டிடத்துக்கு அருகே துப்பாக்கி நபர்கள் பொலிஸார் மீது துப்பாக்கிப்பிரயோகம் நடத்திய பின்னர் இந்த வங்கிக் கொள்ளை நடந்திருக்கிறது.

வெள்ளைச்சீருடை அணிந்த நான்கு பேர் வங்கி ஊழியரை உள்ளே பூட்டிவிட்டு பணமூட்டையுடன் தப்பிச்சென்றுவிட்டனர்.

விடுதலைப்புலிகள் அரசுக்கு விதித்திருந்த காலக்கெடுவையடுத்து பலத்த பாதுகாப்பு கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் போடப்பட்டிருந்த நேரத்தில் இந்த துணிகர வங்கிக் கொள்ளை நடந்திருக்கிறது.

கடந்த சில மாதங்களில் கொழும்பு நகரின் பல பகுதிகளில் இதுபோன்ற கொள்ளைகள் இடம்பெற்றிருக்கிறது

'செலான்' வங்கியில் கொள்ளை இடம்பெறுவதறகு சுமார் 30 நிமிடங்களுக்கு முன்னரே நாடாளுமன்றக் கட்டடத்துக்கு அருகே பொலிஸார் மீது துப்பாக்கி நபர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. -இ

---

## பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

1985ம் ஆண்டு கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் உபகரணங்கள் கொழும்பிலிருந்து அனுப்பப்படாததால் இந்நிலையம் செயற்படாமல் இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐக்கியநாடுகள் உணவு விவசாயிய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மேற்படி நிலையம் நிர்மாணிக்கப்பட்டது தெரிந்ததே. க இ

---

## பாதை திறப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் கண்டிப்பாக இருப்பதினுல் அவர்கள் தமது காலக்கெடுவை அடுத்த மாதம் 19-ந் திகதி வரை நீடித்துள்ளார்கள்.

இநத காலக்கெடுவுக்குள் ஜனுதிபதி சந்திரிகா பாதை விடயத்தில் தமது நிலைப்பாட்டை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளையில் வடபகுதிக்கான பொருளாதார தடையை நீக்க அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாகநேற்று நாடு திரும்பிய ஜனுதிபதி சந்திரிகா தெரிவித்ததாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. -வி-இ

---

# ஆயுதக் கொள்வனவுக்கு 198 கோடி ரூபா ஒதுக்கீடு

[கொழும்பு]

அரசாங்க இராணுவ உபகரணங்களை கொளவனவு செய்வதற்காக 198 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:சமாதானத்தின்மேல் ஆர்வம் உள்ளதாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கம் இவ்வளவு பெரும் தொகையை ஆயுத கொள்வனவிற்காக ஒதுக்கியிருப்பதானது அரசாங்கத்தின் நடவடிக்கையில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

1983ம் ஆண்டு முதல் 1987 வரை வடக்கு கிழக்கு யுத்தத்திற்காக செலவிடப்பட்ட தொகை மூன்று மகாவலித் திட்டத்தையும் 30 லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தையும் நிறைவேற்றப் போதுமானதாகும்.

முன்னை அரசாங்கம் யுத்தத்திற்காகசெலவிட்ட அதேயளவுபணத்தை தற்போதைய அரசாங்கமும் சமாதானம் பேசிக்கொண்டு செலவிடுவதாகவும் தெரிவித்தார். க இ

---

## யாழ்,பல்கலைக்

1ம் பக்கத்தொடர்ச்சி)

எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காததினுல் கொழும்புத் துறைமுகத்தில் இப்பொருட்கள் தேங்கிக் கிடந்தது தெரிந்ததே.

தற்பொழுது பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்துள்ளதினுல் இப்பொருட்கள் அடுத்த வாரம் கப்பல் மூலம யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான இந்த அன்பளிபு உபகரணங்களில் கொம்பியூட்டர் இயந்திரங்கள் கூடுதலாக இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வி- இ

---

## நடுகை ஆரம்பம்

(அரியாலை)

யாழ். மாவட்டத்திலுள்ள கிராமப் பகுதிகளில் வெங்காய நடுகை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் சிறுதானியப் பயிர்கள் உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. -59

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under Licence Number B/163613